FIRST INFORMATION REPORT TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

Under Section 173 BNSS

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

Jagan 19/6/26 C 8167203

1. District : மாவட்டம் Ranipet PS: Vigilance & காவல்நிலையம் Anti Corruption Year: 2026 ஆண்டு FIR No.: 03/2026 முத.அ. எண் Date: 19.06.2026 நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corrupta (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: U/s 7, 7A, 12 r/w 7

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: U/s 106

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : –

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 18/6/26 Date to : நாள் வரை –

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை Prior to 12.00 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19/6/26 Time : நேரம் 15.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 19/6/26 Time : நேரம் 15.00 hrs & 16.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil Typewritten

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 54 km North East

Beat Number : முறைக் காவல் எண் – (b) Address : முகவரி O/o the Motor Vehicle Inspector Arakkonam

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் – District : மாவட்டம் –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. Nandakumar (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Sivanandam

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 5/5/70 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் –

Date of Issue : வழங்கப்பட்ட நாள் – Place of Issue : வழங்கப்பட்ட இடம் –

(f) Occupation : தொழில் Cell Inspector (g) Address : முகவரி Inspection Cell Office, Vellore Ranipet Tirupattur & Tiruvannamalai Districts, Collectorate, Vellore

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) (1) Tr. S. Muthukumar, Motor Vehicle Inspector (Gr I) Arakkonam, (2) Tr. Anandan (Absconding) Broker, No 11/15A, Samthanin Nagar, II St Ambattur, (3) Tr. V. Mani (Broker), S/o Venkatraman, Owner of Sri Saibalaji Meter Works, Kainur, Arakkonam (4) Tr. P. Gopalakrishnan S/o Pattabi, Owner of G.R Xerox, Kainur Arakkonam

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

– No Delay –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு . —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheets enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு 19/6/26

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 19/6/2026

15. Date & Time of despatch to the court: 19/6/26 19.00hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ..... VGAE Ramesh
Rank: நிலை DSP I .....No. எண் .....

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: இன்று 19.06.2026 ஆம் தேதியன்று பகல் சுமார் 15.00 மணியளவில் இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில், காவல் துணை கண்காணிப்பாளர் V.கணேசன் ஆகிய நான் ஆஜரில் இருந்தபோது, திரு.S.நந்தகுமார், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்-9 அவர்கள் அலுவகத்தில் நேரில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் S.நந்தகுமார், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்-9. பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, இராணிப்பேட்டை. நாள்: 19.06.2026 அய்யா, பொருள்: இராணிப்பேட்டை மாவட்டம் - இருதுறை திடீர் கூட்டு சோதனை - அரக்கோணம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் 18.06.2026 அன்று மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டு சோதனை சம்மந்தமான புகார் சமர்ப்பித்தல் - தொடர்பாக. கடந்த 18.06.2026 ஆம் தேதியன்று காலை 10.00 மணியளவில், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களின் மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் S.நந்தகுமார் ஆகிய எனக்கு இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் வாகன பதிவிற்காகவும், பெர்மிட்டிற்காகவும், ஓட்டுநர் உரிமம், பழகுநர் உரிமம், வாகனத்தகுதிச்சான்றிதழ் பெறுவதற்காகவும், ஓட்டுநர் மற்றும் நடத்துநர் உரிமம் புதுப்பிப்பதற்காகவும், வரும் பொது மக்களிடம் இருந்து அவர்களுக்கு செய்ய வேண்டிய வேலைகளுக்காக மோட்டார் வாகன ஆய்வாளர், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலக அலுவலர்களுக்காகவும், மற்றும் அவரவர் பதவிக்கு ஏற்பவும் அவரவர் செய்து முடிக்க வேண்டிய பணிகளுக்காகவும், ஓட்டுநர் பயிற்சி பள்ளி உரிமையாளர்களிடமிருந்தும், இடைத்தரகர்கள் மூலமாகவும், பொது மக்களிடமிருந்து நேரடியாகவும், இடைத்தரகர்கள் மூலமாகவும் மற்றும் மோட்டார் வாகன ஆய்வு அலுவலகம் அருகில் இருக்கும் வாகன புகை பரிசோதனை மையம், ஜெராக்ஸ் கடை, ஸ்டிக்கர் ஒட்டும் கடை நடத்துபவர்கள் மூலமாகவும் கையூட்டு பெறுவதாகவும், இடைத்தரகர்கள் பலரை அலுவலகத்திற்குள் அனுமதித்து அவர்கள் மூலமாகத்தான் பணிகளை செய்து கொடுப்பதாக தகவல் கிடைக்கப்பெற்றது. மேற்படி தகவலை நான் என்னுடைய தகவலர்கள் மூலம் ஊர்ஜிதம் செய்து கொண்டு, இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.V.கணேசன் அவர்களுக்கு காலை சுமார் 10.30 மணிக்கு தகவல் தெரிவித்து, சுமார் 10.45 மணிக்கு அலுவலகத்தில் இருந்து குழுவினருடன் புறப்பட்டு, அரக்கோணம் மோட்டார் வாகன ஆய்வாளர்

அலுவலகத்தில் இருதுறை திடீர் கூட்டுச்சோதனை மேற்கொள்ள பகல் 12.00 மணிக்கு சென்று சேர்ந்தோம். அப்போது அரக்கோணம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் பொது மக்கள் உள்ளே செல்வதும், வெளியே வருவதுமாகவும், மோட்டார் வாகன அலுவலகத்திற்கு உள்ளேயும், வெளியேயும் சில பொது மக்கள் காத்திருந்தனர். இருதுறை திடீர் கூட்டுசோதனைக்கு முவினராகிய நாங்கள், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் உள்ளே சென்று, அலுவலகத்தின் தென்மேற்கு திசையில் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் இருக்கையில் உட்கார்ந்திருந்த திரு.S.முத்துக்குமார் அவர்களிடமும், அங்கிருந்த மற்ற அலுவலர்களிடமும் என்னையும், காவல் துணை கண்காணிப்பாளர் திரு.V.கணேசன் அவர்களையும், குழுவினரையும் அறிமுகப்படுத்திக்கொண்டு, அடையாள அட்டையை காண்பித்து, மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு சோதனைக்கு வந்துள்ள நோக்கம் தெரிவிக்கப்பட்டது. பின்னர், இருதுறை திடீர் கூட்டுச்சோதனைக்கு வந்த அலுவலர்களாகிய நாங்கள் எங்களை சுயபரிசோதனைக்கு உட்படுத்தி கொண்டு எங்களிடம் எந்த பணமும் இல்லை என்பதை உறுதி செய்து காண்பிக்கப்பட்டது. பின்னர், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.S.முத்துக்குமார் அவர்களை தீரேக சோதனை செய்ய, அவரது சட்டையின் இடதுபுற மேல் பாக்கெட்டில் பணம் ரூ.500/-ம், பின்னர், மோட்டார் வாகன ஆய்வாளர் அறைக்கு அடுத்து இருந்த அறையில் இருந்த கண்காணிப்பாளர் திரு.D.ராஜேந்திரன் அவர்களிடம் பணம் ரூ.380/- ம், புகைப்படம் எடுக்கும் அறையில் இருந்த Bontol Software Pvt.Company-ஐ சேர்ந்த பிரதீப் என்பவரின் Back Bag-ல் இருந்த மணிபர்சில் பணம் ரூ.320/-ம், இருந்தது, மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தின் தென் கிழக்கு முலையில் இருந்த கேபினில் உட்கார்ந்திருந்த உதவியாளர் திரு.சி.சுதர்சன் என்பவரது Back Bag-ல் இருந்த பர்ஸில் ரூ.630/-ம், தட்டச்சர் திரு.முகமது ஈசாக் என்பவரது பேன்ட்டின் வலது புற பின் பாக்கெட்டில் பணம் ரூ.155/-ம், அலுவலக உதவியாளர் திரு.S.குமரவேல் என்பவரிடம் பணம் ரூ.400/- இருந்தன. மேற்படி அலுவலர்கள் அவர்கள் வைத்திருந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் கூறியதால் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், தனி நபர் கையிருப்பு பதிவேடு கைப்பற்றப்பட்டது. பின்னர், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலக காத்திருப்போர் ஹாலில் இருந்த பொது மக்களை விசாரித்து அவர்கள் வைத்திருந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் கூறியதும் அவர்களின் விவரங்களை விசாரித்து, இருதுறை திடீர் கூட்டுச்சோதனை செயல்முறையில் விரிவாக குறிப்பிட்டு அந்த பணம் அவர்களிடமே திரும்பி தரப்பட்டது. மேலும், அரக்கோணம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தினுள் இருந்த இடைத்தரகர்களின் விவரம் பின்வருமாறு: 1) திரு.U.சங்கரன், த/பெ உமாபதி, எ.12/24, H.C.குப்புசாமி தெரு, அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம் அல்லை

ஓட்டுனர் பயிற்சி பள்ளியில் 3 ஆண்டுகளாக பணிபுரிபவர் (பணம் ஏதும் வைத்திருக்கவில்லை), 2) திரு.P.தினேஷ், த/பெ பெருமாள், நெ.2/102, பிள்ளைப்பாக்கம் கிராமம், நெமிலி தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம் - ஓம் முருகா ஓட்டுனர் பயிற்சி பள்ளி பணியாளர் (பணம் - ரூ.510/-), 3) திரு.K.கிருஷ்ணன், த/பெ குப்புசாமி, நெ.22/28, B.P.கோயில் தெரு, பழனிபேட்டை, அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம் - பாலாஜி ஓட்டுனர் பயிற்சி பள்ளி பணியாளர் (பணம் ஏதும் வைத்திருக்கவில்லை), 4) திரு.S.K.சந்தானகிருஷ்ணன், த/பெ சஞ்சீவிராயன், நெ.11, எழில் மண்டபம் தெரு, தக்கோலம், அரக்கோணம் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம் - S.K ஓட்டுனர் பயிற்சி பள்ளியின் உரிமையாளர் (பணம் - ரூ.520/-, 5) திரு.ரெக்கேஷ், த/பெ கிருஷ்ணன், நெ.158/36, பஜனை கோயில் தெரு, கீழ்குப்பம் கிராமம், அரக்கோணம் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம் - பாபு டிரைவிங் ஸ்கூல் பணியாளர் (பணம் - ரூ.500/-). மேற்படி நபர்கள் தாங்கள் வைத்திருந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் கூறியதால், அவரகளிடம் பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை. பின்னர், மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு வெளியில் வந்து சுற்றி சோதனை செய்தபோது, மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தின் முன் பகுதியில் காத்திருப்போர் ஹாலினுடைய ஜன்னல்களுக்கு வெளியில் தரையில் ஒரு மணி பர்ஸில் இருந்து ரூபாய் நோட்டுகள் சிதறி இருந்தன. அந்த பணத்தை மணிபரசுடன் எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் பணம் ரூ.17,700/- இருந்தன. அந்த பணத்திற்கு அலுவலக ஊழியர்களோ, பொது மக்களோ யாரும் உரிமை கோரவில்லை. எனவே, அந்த உரிமை கோராத பணம் ரூ.17,700/- மற்றும் அந்த பிரௌன் நிற மணிபர்சும் கைப்பற்றப்பட்டன. பின்னர், பகல் சுமார் 13.10 மணிக்கு எங்களுக்கு கிடைத்த தகவலின் பேரில், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திலிருந்து சுமார் 200 மீட்டர் தொலைவில் இடைத்தரகராக செயல்படும் பாபு ஓட்டுநர் பயிற்சிப்பள்ளி நடத்தும் பாபு எமிஷன் டெஸ்ட்டிங் சென்டர் என்ற கடைக்கு சென்று, எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு விசாரிக்க, அங்கிருந்த நபர் தன்னுடைய பெயர் வினோத் குமார், த/பெ பாபு என்றும், தான் பாபு ஓட்டுநர் பயிற்சிப்பள்ளி உரிமையாளர் திரு.சந்திரபாபு அவர்களால் நடத்தப்படும் மேற்படி எமிஷன் டெஸ்ட்டிங் சென்டரை தான் மேற்பார்வை செய்து வருவதாகவும், தனக்கு உதவியாக சின்னதுரை என்பவர் இருப்பதாக சொன்னார். பின்னர், மேற்படி கடையை சோதனை செய்ய, அந்த கடைக்குள் வலது புறம் இருந்த கம்ப்யூட்டர் மேஜைக்கு அடியில் இருந்த கல்லாப்பெட்டியை பார்க்க, அதில் பணம் ரூ.400/- இருந்தது. அந்த பணம் குறித்து திரு.வினோத் குமார் அவர்களிடம் கேட்க, அந்த பணமானது இன்று காலை முதல் எமிஷன் செக் செய்ததற்குண்டான பணம் என்று சொன்னதால், அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி

கடையின் உள்புறம் வலது புற முலையில் இருந்த டேபிளின் கீழ் கருப்பு நிறத்தில் ரோஸ் நிற டிசைனும், அதன் முன்புறம் சந்தன நிற டிசைனும் இருந்த லன்ச் பேக் இருந்தது. அந்த லன்ச் பேக் குறித்து, திரு.வினோத் குமார் அவர்களிடம் கேட்க, மேற்படி பையானது திரு.ஆனந்தன் என்பவருடையது என்றும், அவர் சென்னையில் இருந்து தினமும் வருவதாகவும், அவர் அரக்கோணம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு இடைத்தரகராக வேலை செய்து செல்வார் என்றும் சொன்னார். பின்னர், அந்த பேக்கை திறந்து பார்க்க, அதில் பணம் கத்தையாக இருந்தது. அந்த பணம் வைத்தது குறித்து மேற்படி திரு.ஆனந்தன் ஏதும் தகவல் சொன்னரா என்று கேட்க, அவர் ஏதும் சொல்லவில்லையென்றும், அவர் நேற்று சுமார் 11.00 மணியளவில் வந்து பையை வைத்துவிட்டு இங்குதான் அருகில் இருந்தார் என்று சொன்னார். பின்னர், அவருக்கு போன் செய்து கூப்பிடுமாறு திரு.வினோத்குமார் அவர்களிடம் சொல்ல அவர் மேற்படி ஆனந்தன் அவர்களின் செல்போன் எண்.9600258828-னில் தொடர்பு கொள்ள மேற்படி செல்போன் எண்ணானது சுவிட்ச் ஆப் என வந்தது. பின்னர், அவரை அருகில் தேடியும் அவர் இல்லாததால், அந்த பையில் இருந்த பணத்தை எடுத்து எண்ணிப் பார்க்க, அதில் பணம் ரூ.1,90,900/- இருந்தது. மேலும், அந்த பையில் அரக்கோணம் பாரத ஸ்டேட் வங்கி கிளையின் இரண்டு பாஸ்புத்தகங்கள் இருந்தன. அதில் ஒன்று ஜனனி S/D/H/O Anandan Account No 33105207118 என இருந்தது. மற்றொரு பாஸ்புத்தகத்தை பார்க்க, அதில் ஜீவிதா S/D/H/O Anandan Account No 32256099657 என இருந்தது. மேலும், அந்த பணத்துடன் ஆறு துண்டுச்சீட்டுகளும், மேற்படி திரு.ஆனந்தன் அவர்களின் _ பாண்டுரங்க வேணுகான லீலா சபாவின் ஆயுள் உறுப்பினர் அடையாள அட்டையும் இருந்தன. மேற்படி ஆறு துண்டுச்சீட்டுகளில் மோட்டார் வாகன அலுவலகத்திற்கு கொடுத்த தொகைகள் மற்றும் சில விவரங்கள் குறிக்கப்பட்டிருந்தன. எனவே, மேற்படி பணம் லஞ்சப்பணமாக இருக்கலாம் எனவும், இவ்வளவு பெரிய தொகையை அனாமத்தாக யாருக்கும் சொல்லாமல் அப்படியே வைத்துவிட்டு, போனை சுவிட்ச் ஆப் செய்ததும் சந்தேகத்திற்கு இடமளிப்பதாக இருந்ததால், மேற்படி பையும், அதில் இருந்த பணம் ரூ.1,90,900/-, பாஸ்புத்தகங்களும் மற்றும் அந்த 6 துண்டுச்சீட்டுகளும் கைப்பற்றப்பட்டது. அந்த ஆறு துண்டுச்சீட்டுகளை ஒரு வெள்ளை நிற A4 தாளில் ஒட்டி வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர், எங்களுக்கு கிடைத்த தகவலின் பேரில், மேற்படி கடைக்கு பின்புறம் சுமார் 50 அடி தொலைவில் இருந்த G.R. Xerox என்ற கடைக்கு சென்று, எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு விசாரிக்க, அங்கிருந்த நபர் தன்னுடைய பெயர் கோபாலகிருஷ்ணன் த/பெ பட்டாபி என்றும், தான் அரக்கோணம் கணேஷ் நகரில் வசித்து வருவதாகவும், G.R. Xerox என்ற பெயரில் கடந்த 1 ½ வருடங்களாக ஜெராக்ஸ் கடையை வாடகை நடத்தி வருவதாகவும் சொன்னார். அவரை திரேக சோதனை செய்ய, அவரது

சட்டைப்பாக்கெட்டில் பணம் இருந்தது. அதை எடுத்து எண்ணிப்பார்க்க, ரூ.3,200/-ம், பேன்ட்டின் இடது புற பாக்கெட்டில் பணம் இருந்தது. அதை எடுத்து எண்ணிப் பார்க்க, அதில் பணம் ரூ.5,000/- இருந்தது. மேற்படி பணம் குறித்து, திரு.கோபாலகிருஷ்ணன் அவர்களிடம் விசாரிக்க, அவர் தன்னுடைய அம்மாவின் மருத்துவ செலவிற்கும், கடை வாடகைக்காக ரூ.3,200/- வைத்திருப்பதாக சொன்னார். எனவே, அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. ஆனால், பேன்ட் பாக்கெட்டில் இருந்த பணம் ரூ.5,000/-க்கு அவர் தக்க முகாந்திரம் சொல்லாததால், அந்த பணம் தக்க முகாந்திரம் கூற இயலாத பணமாக கைப்பற்றப்பட்டது. மேலும், அந்த கடைக்கு பக்கத்தில் இருந்த ஸ்ரீ சாய் பாலாஜி மீட்டர் ஓர்க்ஸ் என்ற கடைக்கு சென்று, அங்கிருந்த நபரிடம் எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு விசாரிக்க, அங்கிருந்த நபர் தன்னுடைய பெயர் மணி த/பெ வெங்கட்ராமன் என்றும், தான் அரக்கோணம் பெருமாள்ராஜபேட்டையில் வசித்து வருவதாகவும், தான் மேற்படி கடையை கடந்த ஐந்து வருடங்களாக நடத்தி வருவதாகவும், தன்னுடைய கடையில் ஆட்டோ மீட்டர் பொருத்துவதும், Reflector Sticker பொருத்துவதாகவும், இதை தவிர எலக்ட்ரானிக் வேயிங் ஸ்கேல் பழுது பார்ப்பதும், வாங்கி விற்பனையும் செய்து வருவதாக சொன்னார். அவரை திரேக சோதனை செய்ய, அவரது பேன்ட் வலது பாக்கெட்டில் பணம் இருந்தது. அதை எடுத்து பார்க்க, அது ரூபாய் தாள்கள் தனித்தனியாக வைக்கப்பட்டிருந்தது. அதை எடுத்து எண்ணிப்பார்க்க, ரூ.17,500/-ம், இருந்தது. மேற்படி பணம் குறித்து, திரு.மணி அவர்களிடம் விசாரிக்க, அவர் அந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் கூறவில்லை. எனவே அந்த பணம் ரூ.17,500/- கைப்பற்றப்பட்டது. மேலும், அந்த கடையில் இருந்த Back Bag-யை சோதனை செய்ய, அதில் Electrical Items இருந்தன. அந்த Bag-முன்புற ஜிப்பை திறந்து பார்க்க, அதில் பணம் இருந்தது. அந்த பணத்தை எடுத்து எண்ணிப் பார்க்க, அதில் பணம் ரூ.20,000/- இருந்தது. அந்த பணம் குறித்து மேற்படி திரு.மணி அவர்களிடம் விசாரிக்க, அந்த பணமானது பேட்டரி விற்ற பணம் என்று சொன்னார். அதனால், அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர், மேற்படி திரு.வினோத் குமார், திரு.கோபாலகிருஷ்ணன் மற்றும் திரு.மணி ஆகியோர்களை மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு அழைத்து வந்து, அவர்களிடம் பறிமுதல் செய்யப்பட்ட பணம் குறித்து, மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.முத்துக்குமார் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது. மேற்படி நபர்கள் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு இடைத்தரகர்களாக இருப்பதால்தான் அவர்களிடம் அந்த பணத்தை கைப்பற்றியதாக அவருக்கு தகவல் தெரிவிக்க, அவர் தனக்கும், மேற்படி மூவருக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என சொன்னார். பின்னர், திரு.முத்துக்குமார், மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் இருந்து

அரக்கோணம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலக ஊழியர்கள் வருகைப்பதிவேடு, ஒப்பந்த ஊழியர்கள் வருகைப்பதிவேடு (Bontol Software Pvt.Company), ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஓட்டுனர் வருகைப்பதிவேடு, தாமத வருகை பதிவேடு, மாற்றுப்பணி பதிவேடு, 18.06.2026 ஆம் தேதியன்று வாகன பதிவு செய்யப்பட்ட விவரங்களும் இதர பதிவு விவரங்கள் பார்வை செய்யப்பட்டு, அவற்றின் முதல் மற்றும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள கடைசி பக்கங்களில் நானும், காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.முத்துக்குமார் ஆகியோர் கையொப்பம் செய்து கைப்பற்றப்பட்டன. மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனை, 18.06.2026 ஆம் தேதி 21.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனையின்போது தக்க முகாந்திரம் கூற இயலாத பணம் ரூ.2,31,100/- மற்றும் ஆவணங்களும் கைப்பற்றப்பட்டது. மேற்படி இருதுறை திடீர் கூட்டுச்சோதனை முடியும் வரையிலும் மேற்படி திரு.ஆனந்தன் என்பவர் அவர் பையில் வைத்திருந்த பணத்தை கோரி திரு.வினோத் குமார் அவர்களிடமோ அல்லது இருதுறை திடீர் கூட்டுச்சோதனை அதிகாரிகளிடமோ வரவில்லை. மேலும் இந்த இருதுறை திடீர் கூட்டு சோதனையின்போது, மேற்படி அரக்கோணம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் இருந்த பொருட்களுக்கும், ஆவணங்களுக்கும் எவ்வித சேதமும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலக அலுவலர்களுக்கு உடலளவிலும், மனதளவிலும் எவ்விதமான துன்புறுத்தலும் ஏற்படுத்தப்படவில்லை. மேற்படி அரக்கோணம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் நேற்று 18.06.2026 ஆம் தேதி பகல் 12.00 மணி முதல் 21.30 மணி வரை நடத்திய இருதுறை திடீர் கூட்டுச்சோதனையில் கைப்பற்றப்பட்ட உரிமை கோராத பணம் ரூ.17,700/- மற்றும் இடைத்தரகர்களிடம் கைப்பற்றப்பட்ட தக்க முகாந்திரம் கூறாத பணம் ரூ.2,13,400/-, ஆக மொத்தம் ரூ.2,31,100/-, ஆவணங்கள் மற்றும் இருதுறை திடீர் கூட்டு சோதனை நடவடிக்கைகள் குறித்த செயல்முறை ஆகியவற்றை உரிய மேல்நடவடிக்கை ஏதுவாக இத்துடன் அசலாக ஒப்படைக்கப்படுகிறது. அரக்கோணம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்குள் இடைத்தரகர்கள், ஓட்டுநர் பயிற்சிப்பள்ளி பணியாளர்கள் என்ற பெயரில் இடைத்தரகர்களை அனுமதித்தும், பொது மக்களுக்காக அவர்களின் தேவைக்கு சட்டப்படி செய்ய வேண்டிய பணிகளுக்காக இடைத்தரகர்கள் மூலமாக அரசால் நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு கூடுதலாக கணினி வழியிலான பணப்பரிவர்த்தனையை மீறி லஞ்சமாக பணத்தை பெற்று பொது மக்களை அலைக்கழித்து சட்டப்படி செய்ய வேண்டிய பணிகளுக்காக கையூட்டு பெற அனுமதித்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.S.முத்துக்குமார் என்பவர் மீதும், இடைத்தரகர்களாக செயல்பட்ட திரு.ஆனந்தன் (தலைமறைவு) எண்.11/15A,

சம்தாரியா நகர் 2-வது தெரு, அம்பத்தூர் (Bank Pass Book-ல் உள்ளபடி), திரு.V.மணி, த/பெ வெங்கடராமன், உரிமையாளர், ஸ்ரீ சாய் பாலாஜி மீட்டர் ஒர்க்ஸ், (மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு அருகில்) கைனூர், அரக்கோணம் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம் மற்றும் திரு.P.கோபாலகிருஷ்ணன், த/பெ பட்டாபி, உரிமையாளர், G.R.Xerox, (மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு அருகில்) கைனூர், அரக்கோணம் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம் ஆகியோர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தங்கள் நம்பிக்கைக்குரிய ஒம்/- xxxxxxxxx (S.நந்தகுமார்) 19.6.2026 மு.வ.ஆ., O/o ICO/VLR 9 இணைப்பு: மேற்சொன்னவாறு

Sir, Received the complaint on 19.6.2026 at 15.00 hrs and registered a case in Ranipet V&AC Cr.No.3/2026 u/s 7, 7(A), 12, r/w 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 and U/S 106 BNSS on 19.06.2026 at 16.00 hrs. Sd/- xxxxxxxx (V.Ganesan), 19.06.2026 DSP/VAC/RPT.

The FIR in original along with the complaint and its enclosure sent to the Hon'ble Principal District & Sessions Judge / Special Judge, Ranipet and other copies to the Officers concerned.

19/6/2026

Deputy Superintendent of Police
Vigilance & Anti Corruption
Ranipet District.